மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 100/2022 |
| பெயர் | : | (கணேசன் PW4/ LW7) |
| த/பெ. க/பெ | : | சொள்ளமுத்து |
| வயது | : | 44 |
| கிராமம் | : | கீழக்கோட்டை |
| தாலுகா | : | ஓட்டப்பிடாரம் |
| Calling | : | தலைமைக்காவலர் |

(All accused are absent)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th day of July 2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது புதியம்புத்தூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.03.2021–ம் தேதி இரவு 20.00 மணிக்கு புளியம்பட்டி காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது சிங்கத்தாகுறிச்சி லெட்சுமணன் மகன் பரமசிவன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.17/2021 பிரிவுகள் 441, 294(பி), 352, 506(II) இதச உ/இ 109 இதச ஆக வழக்கு பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கோவில்பட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக புளியம்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.வெள்ளத்துரை அவர்களுக்கு தகவல் தெரிவித்து விசாரணைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் புகார் மனுவில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவில் 3 அடி கம்பியை வைத்து தாக்க வந்ததாக குறிப்பிட்டுசொல்லவில்லை. புகார் மனுவில் உள்ள ஆபாச வார்த்தைக்கும் முதல் விசாரணையில் சொன்ன ஆபாச வார்த்தைகளும் வெவ்வேறானவை என்றால்

சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் 5 கிலோ மீட்டர் தூரம் என்றால் சரிதான். 3 மணி நேரம் கழித்து தான் புகாா மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் அசா 1 புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/–Tr.A.Dharanidharan
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.